செய்தி வெளியீடு எண். 46-2017 நாள்: 23.06.2017

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலகத்திற்கு தட்டச்சர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், துப்புரவு பணியாளர் பணியிடங்களை **ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் தகுதியான பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களை** கொண்டு நியமனம் செய்ய பழங்குடியின இனத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

******

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலகத்திற்கு தட்டச்சர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், துப்புரவு பணியாளர் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் தகுதியான பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களை கொண்டு நியமனம் செய்வது தொடர்பாக பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தட்டச்சர்/ கணினி இயக்குபவர் பணியிடத்திற்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தட்டச்சில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஏதேனும் ஒன்றில் உயர்நிலையும் மற்றொன்றில் இளநிலை தேர்ச்சியும் (குறைந்தபட்சம்) பெற்றிருக்க வேண்டும். 18 வயது முதல் 35 வயது வரை இருக்க வேண்டும். தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/-.

ஓட்டுநர் பணியிடத்திற்கு இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். 25 வயது முதல் 40 வயது வரை இருக்க வேண்டும். தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.12,000/-.

அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 18 வயது முதல் 35 வயது வரை இருக்க வேண்டும். தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.8,000/-.

துப்புரவு தொழிலாளர் பணியிடத்திற்கு எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். 18 வயது முதல் 35 வயது வரை இருக்க வேண்டும். தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.6,000/-.

எனவே, மேற்படி தகுதியுள்ள பழங்குடி இனத்தைச் சேர்ந்த நபர்கள் தங்களது விண்ணப்பங்களை 07.07.2017 மாலை 5.00 மணிக்குள் திட்ட அலுவலர், பழங்குடியினர் நலம், வட்டாட்சியர் அலுவலக வளாகம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம் என்ற முகவரிக்கு வந்து சேரும் வகையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், பழங்குடியினர் நலத்துறை சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக, திட்ட அலுவலர், பழங்குடியினர் நலம், வட்டாட்சியர் அலுவலக வளாகம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம் - 606 202 என்ற முகவரியில் இயங்கி வரும் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.